# குரூப் 2ஏ - பொதுத்தமிழ்

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
## (இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஔவையார்)

### இனியவை நாற்பது :

பூதஞ்சேந்தனார் என்பவர் இயற்றிய நூல் இனியவை நாற்பது. இது நாற்பது வெண்பாக்களினால் ஆனது. பண்டைக்காலத் தமிழ்நூல் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

உலகில் நல்ல அல்லது இனிமையான விடயங்களை எடுத்துக்கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலின் நோக்கம். ஒவ்வொரு பாடலும் மூன்று நல்ல விடயங்களை எடுத்துக் கூறுகின்றது.

### ஆசிரியர் குறிப்பு :

இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் எனப்படுவர். இவர் தந்தையார் மதுரைத் தமிழாசிரியர் பூதன். இவர் வாழ்ந்த நாடு பாண்டி நாடு.

இவர் சிவன், திருமால், பிரமன் முதலிய மூவரையும் பாடியுள்ளார். ஆதலால் இவரின் சமயம் வைதீகமாகும். இவர் சர்வ சமய நோக்குடையவராயிருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

இவர் பிரமனைத் துதித்திருப்பதால் கி.பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பிந்தியவர் என்பதோடு, இன்னா நாற்பதின் பல கருத்துக்களை அப்படியே எடுத்தாளுவதால் இவர் அவருக்கும் பிந்தியவர் எனலாம். அதனால் இவரது காலம் கி.பி.725-750 எனப்பட்டது.

### நூற்குறிப்பு

இனியவை நாற்பது கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 செய்யுட்களைக் கொண்டது. இவற்றுள், 'ஊரும் கலிமா'எனத் தொடங்கும் பாடல் ஒன்று மட்டுமே (8) பஃறொடை வெண்பா. ஏனைய அனைத்தும் இன்னிசை வெண் பாவினால் ஆக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் நான்கு இனிய பொருள்களை எடுத்துக் கூறும் பாடல்கள், நான்கே நான்கு தான் உள்ளன(1, 3, 4, 5). எஞ்சிய எல்லாம் மும்மூன்று இனிய பொருள்களையே சுட்டியுள்ளன.

இவற்றில் எல்லாம் முன் இரண்டு அடிகளில் இரு பொருள்களும், பின் இரண்டு அடிகளில் ஒரு பொருளுமாக அமைந்துள்ளமை கவனிக்கத் தக்கது.

வாழ்க்கையில் நன்மை தரும் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து 'இனிது'என்ற



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

தலைப்பிட்டு அமைத்திருப்பதால் இஃது 'இனியவை நாற்பது'எனப்பட்டது. இதனை 'இனிது நாற்பது', 'இனியது நாற்பது', 'இனிய நாற்பது'என்றும் உரைப்பர்.

**சான்று :**

சுற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

**சான்றுக்கான விளக்கம் :**

சுற்றியிருப்பவர்களுக்குக் கல்வி கற்பித்தல் மிகவும் நல்லது. கற்றறிந்த பெரியோர்களைத் துணை கொண்டு வாழ்தலும் மிக நன்று. சிறிய அளவிலாயினும் தேவைப்படுபவர்களுக்குக் கேட்காமலேயே கொடுப்பது எப்பொழுதுமே நல்லது என்னும் பொருள்படும்.

இது போல் இந்நூலில் 124 இனிய சொற்கள் கூறப்படுகின்றன. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நான்கு நாற்பது பாடல்களைக் கொண்ட நூல்களில் இரண்டாவதாகும்.

**சிறுபஞ்சமூலம் :**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் நான்கு அடிகளால் அமைந்த நூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு பாடலும் அது நீதி புகட்டுவதற்காக எடுத்துக்கொண்ட கருப்பொருள் தொடர்பாக ஐந்து விடயங்களை எடுத்துக்கூறுகிறது.

அனைத்துப் பாடங்களிலும் ஐந்து விடயங்கள் இருப்பதில்லை. எனினும், இது சிறுபஞ்சமூலம் எனப்பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர்.

தமிழிணையப் பல்கலைக் கழகத்தின் நூலகத்தின், சுவடியகப்பிரிவில் 'சிறுபஞ்சமூலம் 'உள்ளது. இதன் முழு மின்நூல், மதுரைத் திட்டத்தில் கிடைக்கிறது.

**ஆசிரியர் குறிப்பு :**

காரியாசான் என்ற சமணப் புலவர் இதனை இயற்றினார். இவரை மாக் காரியாசான் என்று பாயிரச் செய்யுள் 'மா'என்னும் அடை மொழி கொடுத்துச் சிறப்பிக்கின்றது. இந்நூலில் 97 செய்யுள்கள் அமைந்துள்ளன.

**நூற் குறிப்பு :**



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

பஞ்சம் என்றால் ஐந்து என்று பொருளாகும், மூலம் என்பதற்கு வேர் என்பது பொருளாகும்.

தமிழர் மருத்துவத்தில் உடல் நோய்களைத் தீர்ப்பதற்கு கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய ஐந்தின் வேர்களைச் சேர்த்து மருந்தாக்குவது போல, ஐந்து விடயங்கள் மூலம் நீதியைப் போதித்து, இந்நூல் ஒழுக்கக்கேட்டுக்கு மருந்தாகிறது.

**சான்று :**

பொருள் உடையான் கண்ணதே, போகம்; அறனும்,
அருள் உடையான் கண்ணதே ஆகும்; அருள் உடையான்
செய்யான் பழி; பாவம் சேரான்; புறமொழியும்
உய்யான், பிறன் செவிக்கு உய்த்து.

**ஏலாதி :**

பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பில் அடங்கிய பண்டைத் தமிழ் நீதி நூல்களில் ஒன்று ஏலாதி.

**ஆசிரியர் குறிப்பு :**

சமண சமயத்தைச் சேர்ந்தவரான கணிமேதாவியார் என்பவரால் எழுதப்பட்டது இந்நூல். திணைமாலை நூற்றைம்பது என்னும் அகப்பொருள் நூலை இயற்றியவரும் இவரே. ஏலாதியில் 81 பாடல்கள் உள்ளன.

**நூற் குறிப்பு :**

இந்நூலின் பெயர் ஏலத்தை முதலாகக் கொண்ட இலவங்கம், சிறு நாவற் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஏலாதி என்னும் மருந்து ஒன்றின் பெயரை அடியொற்றி ஏற்பட்டது.

இந்நூலிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் அதன் கருப்பொருள் தொடர்பில் ஆறு நீதிகளைக்கூறி மக்களின் ஒழுக்கக் குறைவுக்கு மருந்தாவதால் இந்நூலுக்கும் ஏலாதி என்ற பெயர் ஏற்பட்டது.

**சான்று :**

இடைவனப்பும், தோள்வனப்பும், ஈடில் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோ(டு)
எழுத்தின் வனப்பே வனப்பு.



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

## ஔவையார் :

ஔவையார் நன்கு அறிமுகமான ஒரு பெண்பாற் புலவர். ஔவையார் என்னும் பெயர் பூண்ட புலவர்கள் பலர் இருந்தனர்.

நூலமைதி, தமிழ்நடை, தொடர்புடையோர் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு வரலாற்று நோக்கில் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள்.

## காலந்தோறும் ஔவையார்

- ஔவையார், சங்ககாலப் புலவர்
- ஔவையார், அங்கவை சங்கவை மணம் முடித்தவர்
- ஔவையார், அறநூல் புலவர்
- ஔவையார், சமயநூல் புலவர்
- ஔவையார், கதையில் வரும் புலவர்
- ஔவையார், சிற்றிலக்கியப் புலவர்

## ஔவையார் இயற்றிய நூல்கள்

### ஆத்திசூடி

ஆத்திசூடி என்பது 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் இயற்றிய நீதி நூல் ஆகும். சிறுவர்கள் இளம் பருவத்திலேயே பாடம் செய்து மனதில் இருத்திக்கொள்ளும் வகையில் சிறுசிறு சொற்றொடர்களால் எளிமையாக அமைந்தது ஆத்திசூடி.

### கொன்றை வேந்தன்

கொன்றை வேந்தன் ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். கொன்றை மரத்தின் மலரை விரும்பி அணியும் கடவுள் சிவன். அவரது புதல்வர்களுள் ஒருவாகிய முருகனை போற்றி இந்நூல் பாடப்பட்டுள்ளது.

### மூதுரை

மூதுரை ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை (மூப்பு + உரை) என அழைக்கப்படுகிறது. இதற்கு வாக்குண்டாம் என்ற இன்னொரு பெயரும் உண்டு.

### நல்வழி





www.Padasalai.Net

நல்வழி ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். மக்கள் வாழ்க்கையில் பின் பற்றவேண்டிய நல்வழிகளை இந்நூல் எடுத்துரைப்பதால் இப்பெயர் ஏற்பட்டது.

## வினா விடைகள் :

1. இனியவை நாற்பதின் ஆசிரியர் பெயர்
அ) விளம்பி நாகனார்
ஆ) கம்பர்
இ) கபிலர்
ஈ) பூதஞ்சேந்தனார்
**விடை : ஈ) பூதஞ்சேந்தனார்**

2. பூதஞ்சேந்தனார் பிறந்த ஊர்
அ) ஈரோடு
ஆ) நாமக்கல்
இ) மதுரை
ஈ) திருநெல்வேலி
**விடை : இ) மதுரை**

3. பூதஞ்சேந்தனார் எந்த காலத்தை சேர்ந்தவர்
அ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு
ஆ) கி.பி. முன்றாம் நூற்றாண்டு
இ) கி.பி. ஒன்றாம் நூற்றாண்டு
ஈ) கி.பி. நான்காம் நூற்றாண்டு
**விடை : அ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு**

4. பூதஞ்சேந்தனார் இயற்றிய நூலின் பெயர்
அ) திரிகடுகம்
ஆ) நாலடியார்
இ) இன்னா நாற்பது
ஈ) இனியவை நாற்பது
**விடை : ஈ) இனியவை நாற்பது**

5. இனியவை நாற்பது ------- நூல்களுள் ஒன்று
அ) பேரிலக்கியம்
ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
இ) பதினெண்மேல்க்கணக்கு
ஈ) சிற்றிலக்கியம்
**விடை : ஆ) பதினெண்கீழ்க்கணக்கு**

6. நன்மைதரும் இனிய கருத்துகளை நாற்பது பாடல்களில் தொகுத்துரைப்பதால் ------------



www.Padasalai.Net

---- எனப் பெயர்பெற்றது.
அ) இன்னா நாற்பது
ஆ) சிற்றிலக்கியம்
இ) பேரிலக்கியம்
ஈ) இனியவை நாற்பது
**விடை : ஈ) இனியவை நாற்பது**

7. ------------ ஒவ்வொரு பாடலும் மூன்று அல்லது நான்கு நற்கருத்துகளை இனிமையாகக் கூறும்.
அ) இனியவை நாற்பது
ஆ) சிற்றிலக்கியம்
இ) பேரிலக்கியம்
ஈ) இன்னா நாற்பது
**விடை : அ) இனியவை நாற்பது**

8. இனியவை நாற்பதில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
அ) 40
ஆ) 32
இ) 74
ஈ) 41
**விடை :ஈ) 41**

9. இளமையை மூப்பு என்றுணர்தல் இனிதே இது எந்நூலில் இடம்பெற்றுள்ளது.
அ) சிற்றிலக்கியம்
ஆ) இனியவை நாற்பது
இ) பேரிலக்கியம்
ஈ) இன்னா நாற்பது
**விடை :ஆ) இனியவை நாற்பது**

10. இனியவை நாற்பது ------ வெண்பாக்களால் ஆன நூல்
அ) 38
ஆ) 41
இ) 69
ஈ) 50

**விடை :ஆ) 41**

11. உலகில் நல்ல அல்லது இனிமையான விஷயங்களை எடுத்துக்கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே -------------- நூலின் நோக்கம் ஆகும்
அ) சிற்றிலக்கியம்
ஆ) பேரிலக்கியம்
இ) இனியவை நாற்பது



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

ஈ) இன்னா நாற்பது
**விடை :இ) இனியவை நாற்பது**

12. கற்றறிந்த பெரியோர்களைத் துணை கொண்டு வாழ்தலும் மிக நன்று என்ற கருத்தினை உரைக்கு நூல் -----------
அ) இன்னா நாற்பது
ஆ) பேரிலக்கியம்
இ) இனியவை நாற்பது
ஈ) சிற்றிலக்கியம்
**விடை :இ) இனியவை நாற்பது**

13. இனியவை நாற்பது என்ற நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் ------------- நல்ல விஷயங்களை எடுத்துக் கூறுகின்றது
அ) ஆறு
ஆ) ஐந்து
இ) நான்கு
ஈ) மூன்று
**விடை : ஈ) மூன்று**

14. இனியவை நாற்பது என்ற நூலில் உள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை -----------
அ) இருபது
ஆ) பத்து
இ) முப்பது
ஈ) நாற்பது
**விடை : ஈ) நாற்பது**

15. இனியவை நாற்பது என்ற நூல் பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ------------ எனமுடியும் பெயர்கொண்ட நான்கு நூல்களில் இரண்டாவது நூலாகும்
அ) நாற்பது
ஆ) முப்பது
இ) பத்து
ஈ) இருபது
**விடை : அ) நாற்பது**

16. சுற்றியிருப்பவர்களுக்குக் ----------- கற்பித்தல் மிகவும் நல்லது என்ற கருத்தைக் கூறும் நூல் எது?
அ) நாலடியார்
ஆ) திரிகடுகம்
இ) ஏலாதி
ஈ) கல்வி, இனியவை நாற்பது
**விடை : ஈ) கல்வி, இனியவை நாற்பது**


http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

17. பூதஞ்சேந்தனார் --------------- நோக்குடையவராயிருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது

அ) புத்த சமயம்

ஆ) சமணம்

இ) வைணவம்

ஈ) சர்வ சமய

**விடை :ஈ) சர்வ சமய**

18. இனியவை நாற்பது பண்டைக்காலத் தமிழ்நூல் தொகுப்புக்களில் ஒன்றான ---------------- நூல்களுள் ஒன்றாகும்

அ) சிற்றிலக்கியம்

ஆ) பதினெண்கீழ்க்கணக்கு

இ) பேரிலக்கியம்

ஈ) பதினெண்மேல்க்கணக்கு

**விடை :ஆ) பதினெண்கீழ்க்கணக்கு**

19. பூதஞ்சேந்தனார் மதுரையில் உயர்ந்த தமிழாசிரியராக விளங்கியதால் -------------- என்ற சிறப்புப் பெயர் பெற்றார்

அ) செம்மல்

ஆ) விளம்பி

இ) இலக்கியவாதி

ஈ) மதுரைத் தமிழாசிரியர்

**விடை : ஈ) மதுரைத் தமிழாசிரியர்**

20. சிறிய அளவிலாயினும் தேவைப்படுபவர்களுக்குக் கேட்காமலேயே கொடுப்பது எப்பொழுதுமே நல்லது என்று எடுத்துரைக்கும் நூல் -----------

அ) இன்னா நாற்பது

ஆ) சிற்றிலக்கியம்

இ) இனியவை நாற்பது

ஈ) பேரிலக்கியம்

**விடை :இ) இனியவை நாற்பது**

21. குழவி பிணி இன்றி வாழ்தல் இனிதே என்ற பாடல் வரி அமைந்துள்ள நூல் எது?

அ) இனியவை நாற்பது

ஆ) பேரிலக்கியம்

இ)இன்னா நாற்பது

ஈ) சிற்றிலக்கியம்

**விடை : அ) இனியவை நாற்பது**

22. இனியவை நாற்பது ------------ நல்ல விஷயங்களை எடுத்துக் கூறுகின்றது.

அ) ஒன்று

ஆ) மூன்று



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

இ) இரண்டு
ஈ) நான்கு
**விடை : ஆ) மூன்று**

23. ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே என்று கூறியவர்?
அ) விளம்பி நாகனார்
ஆ) கம்பர்
இ) பூதஞ்சேந்தனார்
ஈ) கபிலர்
**விடை : இ) பூதஞ்சேந்தனார்**

24. இனியவை நாற்பது என்ற நூலுக்கு ------------, ------------, ------------- என்ற பெயரும் உண்டு
அ) இகல் நாற்பது, இனிது நாற்பது
ஆ) இனிது நாற்பது, இனியது நாற்பது, இனிய நாற்பது
இ) இயல் நாற்பது, இனிமை நாற்பது
ஈ) இனிமை நாற்பது, இனிது நாற்பது
**விடை :ஆ) இனிது நாற்பது, இனியது நாற்பது, இனிய நாற்பது**

25. ஊரும் கலிமா என்று தொடங்கும் பாடல் ஒன்று மட்டும் ------------ ஆகும்
அ) நேரிசை வெண்பா
ஆ) இன்னிசை வெண்பா
இ) குறள் வெண்பா
ஈ) பஃறொடை வெண்பா
**விடை :ஈ) பஃறொடை வெண்பா**

26. வாழ்க்கையில் நன்மை தரும் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து 'இனிது'என்று தலைப்பிட்டு அமைந்திருக்கும் நூல் எது?
அ) இன்னா நாற்பது
ஆ) பேரிலக்கியம்
இ)இனியவை நாற்பது
ஈ) சிற்றிலக்கியம்
**விடை : இ)இனியவை நாற்பது**

27. "ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்" எனக்கூறியவர் யார்?
அ) திருவள்ளுவர்
ஆ) கபிலர்
இ) ஔவையார்
ஈ) கம்பர்
**விடை : இ) ஔவையார்**

28. நட்டான் என்பதன் பொருள் என்ன?
அ) எதிரி



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

www.Padasalai.Net

ஆ) நண்பன்
இ) பகை
ஈ) இனம்
**விடை : ஆ) நண்பன்**

29. கல்வியொழுக்கத்தின் ஆசிரியர் யார்?
அ) கம்பர்
ஆ) கபிலர்
இ) திருவள்ளுவர்
ஈ) ஔவையார்
**விடை : ஈ) ஔவையார்**

30. “பாலும் தெளித்தேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்”
“சங்கத் தமிழ் மூன்றும்தா” எனக் கூறியவர்?
அ) கபிலர்
ஆ) ஔவையார்
இ) கம்பர்
ஈ) திருவள்ளுவர்
**விடை : ஆ) ஔவையார்**

31. ஆத்திசூடி என்னும் நீதி நூலினை இயற்றியவர்
அ) கம்பர்
ஆ) ஔவையார்
இ) விளம்பி நாகனார்
ஈ) கபிலர்
**விடை : ஆ) ஔவையார்**

32. கொன்றைவேந்தன் என்னும் நூலினை இயற்றிவர்
அ) கம்பர்
ஆ) விளம்பி நாகனார்
இ) ஔவையார்
ஈ) கபிலர்
**விடை : இ) ஔவையார்**

33. ஔவையாரின் பக்தி நூலின் பெயர்
அ) நாலடியார்
ஆ) தொல்காப்பியம்
இ) இன்னா நாற்பது
ஈ) விநாயகர் அகவல்
**விடை : ஈ) விநாயகர் அகவல்**



www.Padasalai.Net

34. நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - இவ்வரி இடம் நூல் எது?
அ) இன்னா நாற்பது
ஆ) கொன்றைவேந்தன்
இ) நாலடியார்
ஈ) மூதுரை
**விடை : ஈ) மூதுரை**

35. ஔவையார் இயற்றிய தத்துவ நூலின் பெயர்
அ) நல்வழி
ஆ) இன்னா நாற்பது
இ) ஔவைக்குறள்
ஈ) கொன்றைவேந்தன்
**விடை : இ) ஔவைக்குறள்**

36. ஆத்திசூடி என்பதன் பொருள் என்ன?
அ) ஆத்திப்பூமாலையை சூடிய திருமால்
ஆ) ஆத்திப்பூமாலையை சூடிய சிவபெருமான்
இ) ஆத்திப்பூமாலையை சூடிய பிரம்மன்
ஈ) ஆத்திப்பூமாலையை சூடிய இந்திரன்
**விடை : ஆ) ஆத்திப்பூமாலையை சூடிய சிவபெருமான்**

37. வாக்குண்டாம் என அழைக்கப்படுவது?
அ) திருவள்ளுவர்
ஆ) மூதுரை
இ) ஏலாதி
ஈ) நாலடியார்
**விடை : ஆ) மூதுரை**

38. மூதுரை என்னும் நூலினை இயற்றியவர்
அ) கம்பர்
ஆ) கபிலர்
இ) திருவள்ளுவர்
ஈ) ஔவையார்
**விடை : ஈ) ஔவையார்**

39. கடல்கோளும் கரையானும் அழித்தது போக எஞ்சிய தமிழ்நூல்கள் எவை?
அ) அறநெறி நூல்கள்
ஆ) சங்க நூல்கள்
இ) தொகை நூல்கள்
ஈ) நீதி நூல்கள்



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

www.Padasalai.Net

**விடை : ஆ) சங்க நூல்கள்**

40. 1. ஏலாதி எத்தனை அடி வரையரைகள், எத்தனை அருங்கருத்துக்களை உள்ளடக்கியது?

(அ) 4 அடி,6 கருத்துகள்

(ஆ) 4 அடி,8 கருத்துகள்

(இ) 2 அடி,6 கருத்துகள்

(ஈ) 4 அடி,4 கருத்துகள்

**விடை : (அ) 4 அடி,6 கருத்துகள்**

41. சங்க இலக்கியத்தில் உள்ள மொத்த அடிகளின் எண்ணிக்கை?

(அ) 14303

(ஆ) 48200

(இ) 26350

(ஈ) 23450

**விடை : (இ) 26350**

42. ஏலாதி----------- நூல்கள் ஒன்று.

(அ) பதினெண்கீழ்க்கணக்கு

(ஆ) சிற்றிலக்கியம்

(இ) பேரிலக்கியம்

(ஈ) பதினெண்மேல்கணக்கு

**விடை : (அ) பதினெண்கீழ்க்கணக்கு**

43. சிறுபஞ்சமூலம் என்னும் நூலை இயற்றியவர்

(அ) கபிலர்

(ஆ) கம்பர்

(இ) நல்லாதனார்

(ஈ) காரியாசான்

**விடை : (ஈ) காரியாசான்**

44. சிறுபஞ்சமூலம் என்னும் நூலில் துற்று என்பதன் பொருள் தருக

(அ) உணவு

(ஆ) உடல்

(இ) கடல்

(ஈ) வயல்

**விடை : (அ) உணவு**

45. ஏலாதி -------- வெண்பாக்களை கொண்டுள்ளது.

(அ)15

(ஆ) 57

(இ) 81

www.Padasalai.Net



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

(ஈ) 98

**விடை : (இ) 81**

46. ஏலாதியை இயற்றியவர் யார்

(அ) கபிலர்

(ஆ) கம்பர்

(இ) நல்லாதனார்

(ஈ) கணிமேதாவியார்

**விடை : (ஆ) கம்பர்**

47. சிறுபஞ்சமூலம் என்னும் நூலில் நாடின் என்பதன் பொருள்

(அ) இகல்

(ஆ) ஆராயின்

(இ) கற்றல்

(ஈ) துன்பம்

**விடை : (ஆ) ஆராயின்**

48. கணிமேதாவியார் எச்சமயத்தை சேர்ந்தவர்

(அ) சைவம் சமயம்

(ஆ) புத்த சமயம்

(இ) வைணவ சமயம்

(ஈ) சமண சமயம்

**விடை : (ஈ) சமண சமயம்**

49. கணிமேதாவியார் எந்த காலத்தில் வாழ்ந்தவர்

(அ) கி.மு

(ஆ) கி.பி

(இ) இடை சங்கம்

(ஈ) கடைசங்க காலம்

**விடை : (ஈ) கடைசங்க காலம்**

50. சிறுபஞ்சமூலம் என்னும் நூலில் தக்கம் என்பதன் பொருள் தருக

(அ) கன்று

(ஆ) சிறிய

(இ) பற்று

(ஈ) கவை

**விடை : (இ) பற்று**

www.Padasalai.Net